ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கலையும் கரியும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கலையும் கரியும் ॥

திருச்சாளக்கிராமம்

‡கலையும் கரியும் பரிமாவும்⋆
    திரியும் கானம் கடந்து போய்⋆
சிலையும் கணையும் துணையாகச்⋆
    சென்றான் வென்றிச் செறுக்களத்து⋆
மலை கொண்டலை நீர் அணை கட்டி⋆
    மதிள் நீர் இலங்கை வாள் அரக்கர்
தலைவன்⋆ தலை பத்தறுத்துகந்தான்⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (1)

கடம் சூழ் கரியும் பரிமாவும்⋆
    ஒலி மாந் தேரும் காலாளும்⋆
உடன் சூழ்ந்தெழுந்த கடி இலங்கை⋆
    பொடியா வடி வாய்ச் சரம் துரந்தான்⋆
இடம் சூழ்ந்தெங்கும் இரு விசும்பில்⋆
    இமையோர் வணங்க மணம் கமழும்⋆
தடம் சூழ்ந்தெங்கும் அழகாய⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (2)

உலவு திரையும் குல வரையும்⋆
    ஊழி முதலா எண் திக்கும்⋆
நிலவும் சுடரும் இருளுமாய்⋆
    நின்றான் வென்றி விறல் ஆழி
வலவன்⋆ வானோர் தம் பெருமான்⋆
    மருவா அரக்கர்க்கெஞ்ஞான்றும்
சலவன்⋆ சலம் சூழ்ந்தழகாய⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (3)

www.prapatti.com

ஊரான் குடந்தை உத்தமன்⋆
    ஒரு கால் இரு கால் சிலை வளையத்⋆
தேரா அரக்கர் தேர் வெள்ளம்
    செற்றான்⋆ வற்றா வரு புனல் சூழ்
பேரான்⋆ பேர் ஆயிரம் உடையான்⋆
    பிறங்கு சிறை வண்டறைகின்ற
தாரான்⋆ தாரா வயல் சூழ்ந்த⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (4)

அடுத்தார்த்தெழுந்தாள் பில வாய் விட்-
    டலற⋆ அவள் மூக்கயில் வாளால்
விடுத்தான்⋆ விளங்கு சுடர் ஆழி⋆
    விண்ணோர் பெருமான் நண்ணார் முன்⋆
கடுத்தார்த்தெழுந்த பெரு மழையைக்⋆
    கல் ஒன்றேந்தி இன நிரைக்காத்-
தடுத்தான்⋆ தடம் சூழ்ந்தழகாய⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (5)

தாயாய் வந்த பேய் உயிரும்⋆
    தயிரும் இழுதும் உடன் உண்ட
வாயான்⋆ தூய அரி உருவின்
    குறளாய்ச் சென்று⋆ மாவலியை
ஏயான் இரப்ப⋆ மூவடி மண்
    இன்றே தா என்று⋆ உலகேழும்
தாயான்⋆ காயா மலர் வண்ணன்⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (6)

ஏனோர் அஞ்ச வெஞ்சமத்துள்⋆
    அரியாய்ப் பரிய இரணியனை⋆
ஊனார் அகலம் பிளவெடுத்த⋆
    ஒருவன் தானே இரு சுடராய்⋆
வானாய் தீயாய் மாருதமாய்⋆
    மலையாய் அலை நீர் உலகனைத்தும்



www.prapatti.com

தானாய்⋆ தானும் ஆனான் தன்⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (7)

வெந்தார் என்பும் சுடு நீறும்⋆
    மெய்யில் பூசிக் கையகத்து⋆ ஓர்
சந்தார் தலை கொண்டுலகேழும்⋆
    திரியும் பெரியோன் தான் சென்று⋆ என்
எந்தாய்! சாபம் தீர் என்ன⋆
    இலங்க முது நீர்த் திரு மார்பில்
தந்தான்⋆ சந்தார் பொழில் சூழ்ந்த⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (8)

தொண்டாம் இனமும் இமையோரும்⋆
    துணை நூல் மார்பின் அந்தணரும்⋆
அண்டா எமக்கே அருளாய் என்று⋆
    அணையும் கோயில் அருகெல்லாம்⋆
வண்டார் பொழிலின் பழனத்து⋆
    வயலின் அயலே கயல் பாய⋆
தண் தாமரைகள் முகம் அலர்த்தும்⋆
    சாளக்கிராமம் அடை நெஞ்சே (9)

‡தாரா ஆரும் வயல் சூழ்ந்த⋆
    சாளக்கிராமத்தடிகளை⋆
காரார் புறவின் மங்கை வேந்தன்⋆
    கலியன் ஒலிசெய் தமிழ் மாலை⋆
ஆரார் உலகத்தறிவுடையார்⋆
    அமரர் நல் நாட்டரசாளப்⋆
பேராயிரமும் ஓதுமின்கள்⋆
    அன்றி இவையே பிதற்றுமினே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com